# இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு

## தேசிய இளைஞர் படையணி

# வெற்றிடங்கள்

தேசிய இளைஞர் படையணியில் வெற்றிடமாக உள்ள கீழ்க் காணும் பதவிக்காக சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) (MM 1 - 1)**

இப் பதவி நிரந்தரமானது ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு பங்களிப்பு உரித்தாகும்.

**02. உதவிப் பணிப்பாளர் (மாகாணங்கள்) (MM 1 - 1 Fixed)**

(மேல் மாகாணம் மற்றும் சபரகமுவ மாகாணம்)

இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்,

இப் பதவிக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும்,

அ. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**01. உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) (MM 1 - 1) - தலைமையகத்திற்காக**

**கல்வித் தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. வர்த்தக நிர்வாகி (விசேடம்) வர்த்தக நிர்வாகி மனித வளங்கள் முகாமைத்துவம், விஞ்ஞானமாணி முகாமைத்துவம் (அரச) விசேட, வணிகமாணி (விசேடம்) விஞ்ஞானமாணி மனித வள முகாமைத்துவம் (விசேடம்) வர்த்தக முகாமைத்துவ (மனித வளங்கள்) விசேடம், வர்த்தக நிர்வாகி (மனித வள முகாமைத்துவம்) விசேடம் விஞ்ஞானமாணி (வர்த்தக முகாமைத்துவம்) விசேடம், சட்டமாணி, உடற்கல்விமாணி, விஞ்ஞானமாணி முகாமைத்துவம் (அரச), வணிகமாணி (பொது), கலைமாணி (கௌரவ) ஆகிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்

   மற்றும்

   பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பயிற்சி பாடத்துறையில் குறைந்த பட்சம் இரண்டு வருட (02) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழ்க்காணும் தகைமைகள் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் குறித்த பாடத்துறையில் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
உள்ளக விண்ணபதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**சம்பளமுறை** : MM 1-1, ரூ, (53175 - 10x1, 375 - 15x1910 = 95,575)
இதற்கு மேலதிகமாக அரசின் ஏனைய அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.
ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளும் பதவிகள்

**02. உதவிப் பணிப்பாளர் (மாகாணங்கள்) - மேல் மாகாணம் மற்றும் சபரகமுவ மாகாணத்திற்காக**

**நியமனத் தன்மை** : இப் பதவிக்காக பொதுவாக 03 வருட அதிகூடிய காலத்திற்கு உட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது அத்துடன், ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் தொழில் தருநர்களின் பொறுப்பு நிதிக்கு பங்களிப்பு பதவி வகிப்போருக்கு உரித்தாகும்.

**தகைமைகள் :**

1. பொதுப் பட்டத்துடன் இலங்கைத் தரைப்படையின் மேஜர் தரத்திற்கு அல்லது வான்/கடற் படையில் அதற்குக் குறையாத தரத்தில் குறைந்த பட்சம் 03 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

   அல்லது

2. இலங்கைத் தரைப்படையில் லெப்டினன்ட் கேர்னல் பதவிக்கு அல்லது அப்பதவிக்கு குறையாத கடல்/ தரைப்படையில் பதவியொன்றில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

   அல்லது

3. நாடளாவிய ரீதியிலான சேவையொன்றில் ஆட்சேர்ப்புத் தரத்தில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**வயது** : சேர்த்துக் கொள்ளும் தினத்தில் 50 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். சேவை மூப்பு விடயங்களுக்காக வயதை கவனத்தில் கொள்ளும் போது நிறுவனக் கோவையில் 17.1(அ)இல் குறிப்பிடப்படுமாறு செயற்படும்.

**சம்பளமுறை** : ரூபா.53,175/= மாதாந்த நிரந்தர வேதனம் பதவிக்கு உரித்தாகும்.
அவ்வாறே நீங்கள் ஓய்வு பெற்றவராயின் உங்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியின் அரைவாசி மட்டுமே உரித்தாகும்.

**பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகள் :**

மாகாணத்தின் சகல நிலையங்களிலும் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட முழு ஊழியர் குழாமினதும், பயிற்சி பெறுபவரினதும் மதிப்பீடு, ஊழியர் குழாம் மற்றும் பயிற்சி பெறுபவரின் ஒழுக்கம் மற்றும் நலன்புரி விடயங்கள், பயிற்சியாளர்களின் ஆட்சேர்ப்பு, நிறைவு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல், மாகாணத்திற்குள் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மாகாணத்தின் சகல நிலையங்களினதும் பொறுப்பு மற்றும் சொத்துப் பாதுகாப்பு தலைமையகத்துடன் இணைத்தல் விடயங்கள்

இப் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் பொருத்தமான மாதிரியின் பிரகாரம் விண்ணப்பமொன்றைத் தயாரித்து விண்ணப்பத்தை அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு குறித்த சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் 2025.01.22 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancy@youthcorps.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தியற்ற, குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு - 07**

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி**
**2025.01.09**